DEPOSITION OF WITNESS

IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,
TENKASI.

**OS.No.315/2021**

| | | | |
|---|---|---|---|
| Name | : | ஷாஜகான் | **Pw1** |
| Father's Name | : | | |
| Village | : | | |
| Taluk | : | | |
| Caste | : | | |
| Calling | : | | |
| Religion | : | | |
| Age | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 05th day of October 2023.

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். நான் எனது நிரூபண வாக்குமூலத்தை இன்று தாக்கல் செய்கிறேன். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். நான் அதை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டுள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் உண்மை. 29.08.2021ல் இதன் தபசிலை எனக்கு கிரையம் கொடுக்க சம்மதித்து அதற்கு ஆதரவாக நானும், 1ம் பிரதிவாதியும் எழுதிக்கொண்ட ஒப்பந்தத்தின் அசல் வா.சா.ஆ.1 ஆகும். 16.02.2009 ல் 1ம் பிரதிவாதிக்கு சுப்பையா என்பவர் எழுதிக்கொடுத் கிரையப் பத்திரத்தின் அசல் வா.சா.ஆ.2 ஆகும். 07.08.2009 ல் 1ம் பிரதிவாதிக்கு எம்.முகம்மது உமார் கார்த்தா மற்றும் எம்.முகம்மது யூசுப் எழுதிக்கொடுத்த கிரையப் பத்திரத்தின் அசல் வா.சா.ஆ.3 ஆகும். 17.09.2021ல் 2ம் பிரதிவாதிக்கு 1ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரத்தின் சார்பதிவக நகல் வா.சா.ஆ.4 ஆகும். 17.09.2021ல் 3ம் பிரதிவாதிக்கு 1ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரத்தின் சார்பதிவக நகல் வா.சா.ஆ.5 ஆகும். 29.09.2021ல் நான் பிரதிவாதிக்கு அனுப்பிய

நோட்டீசின் அலுவலக நகல் வா.சா.ஆ.6 ஆகும். 30.09.2021ல் 1, 2 பிரதிவாதிகள் மேற்படி நோட்டீசை பெற்றுகொண்டதற்கான ஒப்புகை அட்டை 2 எண்ணம் வா.சா.ஆ.7 ஆகும். 3ம் பிரதிவாதி மேற்படி நோட்டீசை பெற்றுகொள்ளாமல் திரும்ப வந்த கவர் வா.சா.ஆ.8 ஆகும். 07.10.2021ல் 1ம் பிரதிவாதி அனுப்பிய பதில் நோட்டீஸ் வா.சா.ஆ.9 ஆகும். 12.10.2021ல் 2, 3 பிரதிவாதிகள் அனுப்பிய பதில் நோட்டீஸ் வா.சா.ஆ.10 ஆகும். பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்குவிசாரணை இன்று இல்லை.**

G ANURADHA Digitally signed by G ANURADHA
Date: 2023.10.05 17:18:45 +0530